## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கருவலகஸ்வேவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு (பொருத்தமான வகையில்) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான கருவலகஸ்வேவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்பபை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப்

பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா 5,100,000 பெறுமதியில் சுவீகரிக்கப்பட்டிருந்த காணி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாளேட்டு பதிவுகள் ஊடாக திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | காணிகளின் மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 5,577,006 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| (இ) | ரூபா 134,700 பெறுமதியான இயந்திரம் மற்றும் உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| (ஈ) | முன்னைய ஆண்டு தொடர்பான ரூபா 40,952 ஆன கணக்காய்வு கட்டண குறைவு ஏற்பாடு எரிய செலவினக் கணககில் சீராககல் செய்வதற்கு பதிலாக கடன்கொடுத்தோர் கணக்கிற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (உ) | ஜீப் இல. 2644 ஆனது ரூபா 2,500,000 பெறுமதிக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் சொல்லப்பட்ட பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | Do | Do |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலுவையாகவுள்ள நீர் வரி மீதி ரூபா 2,593,303 ஆக இருந்ததுடன் இது பட்டிலின் பிரகாரம் ரூபா 2,620,413 ஆன இருந்தமையால ரூபா 27,110 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அந்த நடவடிக்கைகளை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கபடும். | வித்தியாசங்களிற்கான காரணங்களை பரிசோதனை செய்யப்பட வேண்டியதுடன் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல ரூபா 332,155 தொகயான 02 கணக்குகளின் மீதிகளின் தொடர்பில் பட்டோலைகள் மற்றும் அவற்றின் மீதான ஏனைய சான்றுகள் இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | இது தொடர்பில் பிரதேச சபை எவ்வித தகவல்களையும் வைத்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளை நிரூபிக்க கூடிய ஆவணச் சாண்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகள | | | |
| (i) விதி இல. .5(3) | வருமான சேகரிப்பு மீது போதிய உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வருமான சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) விதி இல. .5(6) | பிரதேச சபைக்கு விதிக்கப்பட வேண்டிய சகல வருமானங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் உரிய காலப்பகுதிக்குள் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பபட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சகல வருமானங்களையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | சமுதாய அடிப்படை அமைப்பகளை தாபித்து நெறிப் படுத்துவதற்கான (நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதாரம்) 2013 இன் 01 ஆம் இலக்க பட்டயம். | சமுதாய அடிப்படை அமைப்பகளின் பதிவு மற்றும் மேற்பார்வை சொல்லப்பட்ட பகுதி உள்ளுராட்சி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டது. வட மேல் மாகாண நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதார பிரிவில் தாபிக்கப்பட்டிருந்த 16 சமுதாய அடிப்படை அமைப்பகளை பதிவதற்கு பிரதேச சபையால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவிலலை. | எதிர்காலத்தில் வட மேல் மாகாண நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதார பிரிவில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டளைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,769,980 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 1,791,535 ஆகும்.

### 2.2. வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| ---------- | ----------- | --------- | -------- | --------- | ---------- | -------- | ------- | ------- |
| | Rs.'000 | Rs.'000 | Rs.'000 | Rs.'000 | Rs.'000 | Rs.'000 | Rs.'000 | Rs.'000 |
| வீதவரியும் வரியும் | 9,813 | 12,425 | 9,125 | 3,203 | 8,797 | 8,452 | 5,116 | 3,159 |
| வாடகை | 6,024 | 2,019 | 1,929 | 641 | 4,303 | 2,137 | 1,936 | 1,240 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 204 | 201 | 201 | - | 179 | 73 | 73 | - |
| ஏனைய வருமானம் | 45,718 | 37,216 | 37,216 | - | 34,407 | 36,691 | 36,691 | 1,023 |
| மொத்தம் | 61,759 | 51,861 | 48,471 | 3,844 | 47,686 | 47,353 | 43,816 | 5,422 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 583,317 ஆன நிலுவயையாக இருக்கின்ற மதிப்பீட்டு வரி, ரூபா 2,620,413 ஆன நீர் வரி மற்றும் ரூபா 641,395 ஆன வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவயையாக இருக்கின்ற தெகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவயையாக இருக்கின்ற வருமானங்களை உடனடியாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | நீரிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்த 65 வாடிக்கையாளரிடமிருந்து ரூபா 264,026 ஆன தொகை அறவிட வேண்டியிருந்தது. | வேண்டப்பட்ட ஆவணங்கள் முறையாக பேணப் பட்டிருக்காமையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட இயலாதிருந்தது. | நிலுவயையாக இருக்கின்ற தொகைகளை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இளங்காணப்பட்ட குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு எந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கில் காட்டப்பட்டிருந்த கருவலகஸ்வேவா புதிய நீர் செயற்திட்டத்தின் ரூபா 860,201 பெறுமதியான கையிலுள்ள மீதியாக இருக்கின்ற குழாய் கருவிகள் பௌதீக ரீரியாக சமர்ப்பிப்பதற்கு பிரதேச சபையானது தவறியிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | இருக்கின்ற நீர் குழாய் கருவிகள் மீதி பௌதீக ரீரியாக சமர்ப்பிப்பதற்கு இயலக் கூடியவாறு இருக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாத்தன்டிய சேமிப்பு வங்கி கிளையில் ரூபா 74,277 ஆன தொகை பயன்படுத்தப்படாது இருந்தது. | எதிர்காலத்தில் நடவடிக்கைகளை செயற்படுத்தவதற்கு எடுக்கப்படும். | கணக்கை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 இலிருந்து சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றிருக்காத 24 கைத்தொழிலாளர்கள் அனுமதிப் பத்திரங்களை பெறப்பட வேண்டியதுடன் இந்த விடயம் தொடர்பில் வேண்டப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத போதிலும் பிரதேச சபையின் பொறுப்பு நிராகரிக்கப்பட்டிருந்தது. | வியாபரம் தாபிக்கப்பட்டதை உறுதிப்படுத்தவதற்கு களப் பரிசோதணை செய்யப்படுவதுடன் அனுமதி பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான நிலுவைகள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் காப்புறுதி கட்டளையில்லாமல் நீர் தொடர்புபட்ட உபகரண காட்சியறையின்இருப்பு மீதியிலிருந்து ரூபா 404,895 பெறுமதயான பொருட்கள் இருந்த போதிலும் அத்தகைய பொருட்கள் இனங்காண்பது கடினமாக இருந்தது. | எதிர்காலத்தில் காப்புறுதி கட்டளை ஊடாக காட்சியறை பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காப்புறுதி கட்டளை ஊடாக காட்சியறை பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவெண்டியிருந்த 02 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 10,011,592 ஆக இருந்ததுடன் அவற்றில் உள்ளடக்கப்பட்ட 03 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் பெறுமதி ரூபா 160,458 ஆக இருந்தது. | நிலுவை தொகைகளை செகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | நிலுவை தொகைகளை செகரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவெண்டியிருந்த 02 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 11,081,129 ஆக இருந்ததுடன் அவற்றில் உள்ளடக்கப்பட்ட 03 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் பெறுமதி ரூபா 101,363 ஆக இருந்தது. | நினைவுட்டல் கடிதங்கள் திரும்பவும் அனுப்பப் பட்டிருந்ததுடன் உரிய பித்துவைத்த தொகையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |

## 3.3 செயற்பாட்டுத் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுமதியிடப்பட்ட மதிப்பீட்ட வரி 05 ஆண்டுகளிற்கு ஒருதடவை மீளாய்வு செய்யப்பட வேண்டிய பொதிலும் மதிப்பீட்டு வரி 2015 ஆம் ஆண்டில் பிரதேச சபை பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு வரியின் மதிபபீடு அடிப்படையில் 2023 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட்டிரந்தது. | மதிப்பீட்டு வரி மதிப்பாய்வு மேறகொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். | மதிப்பீட்டு வரி திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இராஜாங்க மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் கீழ் அமுலாக்கப்பட்ட புறநெகும செயற்திட்டத்தின் இறுதியில் இருந்த பெறுமதி குறிப்படப்பட்டிருக்காத பொருமாளவான நீர் குழாய் கருவிகள் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் சொல்லப்பட்ட நீர் குழாய் கருவிகளின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு பொருளிருப்புக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உபகரணங்கள் பொருளிருப்புக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உபகரணங்கள் பொருளிருப்புக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாதம்பே சிறுவர் பூங்கா பிரதேச செயலாளரால் நிர்மானிக்கப் பட்டிருந்த மற்றும் பிரதேச சபைக்கு மாற்றப்ப்டிருந்தவை 16 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்பட்டிருக்காது இருந்து இது பலகாலம் புற்செடிகள் மூடியிருந்தது. பின்னர் அவற்றின் விளையாட்டு உபகரணங்கள் இயற்கை அனர்த்தங்களால் சேதமடைந்து ஆபத்தான நிலையில் இருந்தது. | ஆரம்ப பாடசாலைக்கு சிறுவர் பூங்காவை மாற்றுவதற்கு உரிய செயற்பாடுகள் செய்யப்படும். | பராமரிப்பு நடவடிக்கைகள் முறைப்படி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையால் உடமையாக்கப்பட்ட ரூபா 21,262,185 தொகையான 04 சொத்துக்கள் பயனறறு இருந்தது. | மேலும் தேவையான செயற்பாடுகள் செய்யப்படுகின்றன. | கிடைக்கக் கூடிய வளங்களலிருந்து அதிகூடிய பயனை பெறுவதற்கு முறைமைகள் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட வேண்டும். |

### 3.5 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையால் உடமையாக்கப்பட்ட கட்டிடம் அமைந்திருந்த காணிகளின் சட்ட உரிமை மற்றும் சபையால் நிர்வகிக்கப்பட்டு பராமரிக்கப்பட்ட விளையாட்டு மைதானம், சனசரூ மண்டபங்கள் அமைந்திருந்த காணி மற்றும் 65 சுடுகாடுகள் என்பன கையேற்கப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட உரிமையை மாற்றுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையால் கருவலகஸ்வேவா பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு ரூபா 16,728,062 பெறுமதியான 08 செயற்திட்டங்கள் வழங்கப் பட்டிருந்ததுடன் அவையாவும் கூட்டுறவு சங்கத்தால் உப ஒப்பந்தத்திற்கு விடப்பட்டிருந்தது. | எங்களுடைய நிறுவனம் செயற்திட்டத்தை உப ஒப்பந்தத்திற்கு விடுவதற்கு உரிய நிறுவனத்திற் அதிகாரம் வழங்கியிருக்கவில்லை. | அதிகாரமில்லாமல் உப ஒப்பந்தத்திற்கு விடுதல் தொடர்பில் தேவயான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளுராட்சி திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட ரூபா 1,000,000 ஆன ஏற்பாடுகளை செலவழித்து சேதமடைந்த மதகுகளை சரிசெய்கையில் சரியான இடங்களை இனங்காணாமல் ரூபா 994,000 செலவழித்து கும் குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தேவையை இனங்கண்ட பின்னர் கொள்வனவு செய்யபட வேண்டும். |

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் முன்றாம் நிலை மட்டத்தில் 01 வெற்றிடங்கள், இரண்டம் நிலை மட்டத்தில் 08 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலை மட்டத்தில் 09 வெற்றிடங்களும் நிலவியது. | எதிர்காலத்தில் இருக்கின்ற ஊழியர் வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு தேவையான ஆளணி எண்ணிக்கையை சரியாக இனங்கண்டு சொல்லப்பட்ட எண்ணிக்கைக்கு அனுமதி பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.8 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையின் மோட்டார் வாகன காடர் தொடர்பில் 2022 ஆகஸ்ட் 30 இலிருந்து 2023 ஒக்தோபர் 08 வரை 01 ஆண்டும் 01 மாத காலப் பகுதிக்கான ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் மோட்டார் வாக குழு மைலோ மீட்டர் பிரகாரம் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியின் போது 86 மணித்தியாலங்கள் ஓடியிருந்தது. | மோட்டார் வாகனக் காடர் இந்த காலப்பகுதியின் போது ஓடும் நிலையில் இருக்கவில்லை. | வாகன ஓட்டப் பதிவேடு சரியாக எழுதப்பட வேண்டும். |
| (ஆ) | எவ்வித பதிவுகளும் இல்லாமல் 890 லீற்றர்கள் இருந்ததுடன் 325 லீற்றர் வளங்களாக குறிப்பிடப்பட்டது. அத்துடன் பிரதேச சபையின் மோட்டார் காடரின் ஓட்ட அட்டவணைக்கு எரிபொருளை உள்ளடக்குகையில் எரிபொருள் கட்டளை எண்ணிக்கையுடன் 478 லீற்றர்கள் இருந்தன. ஓட்ட அட்டவணைகள் மேற்பார்வை இல்லாமல் எரிபொருள் விரங்கள் பதியப்படுகினறன. | சாரதி வெளிநாடு சென்றிருந்தமையால் விசாரணை சாத்தியமற்றிருந்தது. | வாகன ஓட்ட அட்டவணையில் குறிப்பகள் சரியாக எழுதப்பட வேண்டும். |
| (இ) | பிதேச சபையின் நீர் பவுசர்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை சமப் படுத்தப்பட்டிருக்காததுடன் மைலோ மீட்டர்களில் குறிப்பிடப்பட்ட மைல்களின் எண்ணிக்கையும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | LP-3256 ஆம் லக்க பவுசரின் எரிபொருள் பரிசோதனை தொடர்பான வேண்டுகை எந்திர பொறியியலாளருக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் சாரதி ஓட்ட அட்டவணை எழுதப்படும் போது மைலோ மீட்டரில் குறிப்பிடப்பட்ட மீற்றரை பதிவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தார் | எரிபொருள் சரியாக சமப்படுத்தப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1. வருடாந் செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டத்தில் காட்டப்பட்ட 05 வித்தியாசமான செயற்படுகளின் நிறைவேற்றலிற்காக ரூபா 6,182,625 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் பூர்த்தியாக்கலின் எதிர்பார்க்கப்பட்ட நிலையை அடையப்பட்டிருக்கவில்லை. | செலவழிக்கப்பட்ட பணத்தின் அளவிற்கு நேரொத்த இலாபம் உழைக்கப்படாமையால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைய முடியாதருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் உரிய நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இலக்கு மட்டத்திற்கு இலாபம் ஈட்ட வேண்டும். |

### 4.2. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ‘‘ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030’’ பிரகாரம் 08 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2020 ஆம் அண்டில் பிரதேச சபையால் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதன் முன்னேற்றம் 12 சதவீதத்திற்கும் 100 சதவீத்திற்கும் இடையில் இருந்தது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கபடும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் பிரகாரம் உரிய நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |